# தெய்வீக சுகம்

## P.V. JESUDAS

தேவனுடைய கிருபையும், இறக்கமும், சமாதானமும், உங்களோடு இன்றும் என்றும் எப்பொழுதும் இருப்பதாக!

**ஆ**ண்டவருடைய பிள்ளைகளுக்கு, ஆண்டவர் வைத் திருக்கிற ஒரு விசேஷமான ஆசீர்வாதம் உண்டு.

**“பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.”** — 3 யோவான் 2.

ஆகவே கர்த்தர், விசேஷமாக தம்முடைய பிள்ளைகளாகிய நாம், எல்லாவற்றிலும் சுகமாக வாழவேண்டும் என்று விரும்புகிறார். நாம் இந்த உலகத்தில் இருக்கிற நாட்களெல்லாம் சுகத்தோடு வாழவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். அவர் உலகத்தை படைத்தபோது, மனிதர்கள் சுகமாக என்றன்றைக்கும் வாழவேண்டுமென்று எண்ணிதான் மனிதர்களை படைத்தார். ஆனாலும் பாவம் இந்த உலகத்தில் வந்தபோது, மரணத்தை கொண்டு வந்தது. அந்த மரணம் சீக்கிரமாக மக்களுக்கு வரத்தக்கதாக, அநேகவிதமான பெலவீனங்கள் உலகத்தில் உண்டாயின. இந்த பெலவீனங்களை சாத்தான் கொடுக்கிறான் என்பதை நாம் அறிந்துக்கொள்ளவேண்டும்.

இந்த உலகத்தில் காணப்படுகிற பெலவீனங்களும், சுகவீனங்களும், பற்பலவிதமான வியாதிகளும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு எப்படி வருகிறது? ஆண்டவர் இந்த உலகத்தில் ஒவ்வொரு காரியத்திலும் பல சட்டங்களை வைத்திருக்கிறார். மனிதன் சுகமாக வாழவேண்டுமென்பதற்காக அவர் அநேக சட்டங்களை வைத்திருக்கிறார். ஆண்டவர் வைத்திருக்கிற இந்த சட்டங்களை நாம் மீறும் போது, வியாதி நமக்கு வருகிறது. அந்த சட்டங்களை, வேண்டுமென்று நாம் மீறினாலும் சரி, அல்லது தெரியாதவிதமாக நாம் மீறினாலும் சரி,



எப்படியும் தேவனுடைய சட்டத்தை நாம் மீறும்போது, நமக்கு பலவீனங்களும் சுகவீனங்களும் ஏற்படுகின்றது.

மின்சாரம் எங்கு இருக்கிறதோ, அங்கே கொண்டுபோய் கைகளை வைத்தால், அங்கு ஷாக் அடிக்கதான் செய்யும். எனக்கு தெரியாமல் போய்விட்டதே என்று சொன்னாலும்கூட, அந்த இடத்தில் ஷாக் அடிக்கதான்செய்யும். இறைவன் இந்த உலகத்தை, சட்டங்கள் மூலமாக ஆளுகிறார்.

**“மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.” — கலாத்தியர் 6:7.**

அறுவடை நாம் விதைத்ததைவிட நூறு மடங்கு அதிகமாக இருக்கும். அதேபோலவே நாம் என்ன பாவம் செய்கிறோமோ, அதற்கு தகுந்தாற்போல் அதன் விளைவு அதிகமாக இருக்கும். தேவனுடைய சட்டங்களுக்கும், நம்முடைய உடலை பற்றின சட்டங்களுக்கும், நாம் உண்மையாகவே கீழ்படிவோமானால், சுகம் வரும். அந்த சட்டங்களை நாம் மீறி நடப்போமானால், வியாதிகளும் பெலவீனங்களும் நம்முடைய ஜீவியத்திலே வரும்.

ஆகவே தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆண்டவருடைய சட்டத்திற்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தால், நல்ல சுகத்தையும் பெலனையும் தருவார். அவருடைய சட்டத்தை அசட்டைப்பண்ணி , அந்த சட்டங்களை நாம் மீறி நடக்கும்போது, நமக்கு நிச்சயமான நோய்கள் வியாதிகள் வருகிறது.

தேவன் தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கு, பாதி நேரத்தை தூங்குவதற்காக வைத்திருக்கிறார். ஒரு மனிதன் பகல் முழவதும் அயராமல் வேலைசெய்தாலும், அந்த மனிதன் இரவிலே நன்கு தூங்கவேண்டும். பெரியவர்களுக்கு எட்டு மணி நேரம் தூங்க வேண்டும், சிறியவர்கள் பத்து மணி நேரம் தூங்கவேண்டும், குழந்தைகள் பதினாறு மணி நேரம் தூங்கவேண்டும் என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். அப்படி நன்றாக தூங்கவில்லையென்றால், நம்முடைய உடல் பலவீனப் பட்டு போகிறது. இது சரீரப்பிரகாரமான சட்டமாக இருக்கிறது.

ஆகவே தேவன், மனிதனுக்கு ஒரு நாளில் சில மணி நேரங்கள் தூங்கவேண்டும் என்று மட்டும் ஒதுக்கவில்லை. அப்படி தூங்கும்போது, நம்முடைய அவயவங்கள் பெலப்படுத்தப்படுகிறது. அடுத்த நாள் நாம் எழும்பும்போது, பலத்தோடு சுகத்தோடு வேலை

செய்வதற்கு எழும்புகிறோம். ஆகவே நமது உடலுக்கு தூக்கம் அவசியமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அநேக மணிநேரங்கள் தூங்குவதுமட்டுமல்ல, தேவன் ஏழு நாளில் ஒரு நாளில், சரீரப்பிரகாரமாக ஓய்வு எடுக்கவும் நமக்கு கொடுத்திருக்கிறார்.

இந்த ஏழு நாளில் ஒரு நாள் கர்த்தருடைய பிள்ளைகள் வேலை ஏதும் செய்யாமல் ஓய்வெடுக்கவேண்டுமென்பதை, மருத்துவர்கள் இன்றைக்கு அதிகமாக ஆராய்ச்சி செய்து, இது மிகவும் மிகவும் மக்களுக்கு வேண்டிய ஒரு காரியம் என்று கண்டுப்பிடித்தார்கள்.

யூதர்கள் பரிசுத்த ஓய்வுநாளை உண்மையாக ஆசரிக்கிறவர்கள். அதை ஆவலோடும், ஆர்வத்தோடும், பக்தியோடும் ஆசரிக்கிறவர்கள். அமெரிக்காவிலே ஒரு பெரிய சோதனை நடத்தினார்கள். பல்வேறு இடங்களிலே யூதர்கள் அதிகமாக வாழ்கிற பகுதியிலே, அந்த யூத ஜனங்களின் வயதையும், அமெரிக்காவின் மற்ற மனிதர்களின்
வயதையும் கணக்கிட்டு பார்த்தபோது, அந்த யூதர்கள் மற்ற மனிதர்களைவிட அதிகமாக வாழ்கிறார்கள் என்று கண்டுப்பிடித்தார்கள். மருத்துவர்கள், மற்ற மனிதர்களை விட யூதர்கள் ஏறக்குறைய பதினைந்து, அல்லது இருபது வருடங்கள் அதிகமாக வாழ்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி அவர்கள் அதிகமான வருஷங்கள் வாழ காரணமென்ன?

முதலாவது: அவர்கள் ஏழாம்நாள் ஓய்வுநாளை, தங்களுடைய சரீரத்திற்கு ஓய்வாக அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

இரண்டாவது: அவர்கள் மாமிச உணவைவிட்டு, காய்கறிகளின் உணவை சாப்பிடுகிறார்கள். ஆகவே மருத்துவர்கள் விசேஷமாக கண்டுப்பிடித்தது அந்த சரீர ஓய்வுதான். அதாவது ஏழாம்நாளில் ஓய்ந்திருத்தல்.

அந்த ஓய்வானது ஆண்டவரோடு உறவாடுவதற்கு மட்டுமல்ல, அந்த ஓய்வு நம்முடைய சரீரத்திற்கும் மிகவும் அவசியம் என்பதை இந்த சரீரத்தை உண்டாக்கின ஆண்டவருக்கு நன்றாக தெரியும். அதனால்தான் அந்த கற்பனையை அவர் வைத்திருக்கிறார்.

நம்முடைய பிதாக்கள் ஒரு வேளை வியாதிகளிலே சிக்கியிருந்தால், பிள்ளைகளுக்கு அந்த வியாதிகள் வருகிறது. இதை பற்றி தேவன் என்ன சொல்லுகிறார்?



**“நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.” – யாத். 20:5.**

ஆஸ்துமா பெற்றோர்களுக்கு இருந்தால், பிள்ளைகளுக்கும் வருகிறது. நான் ஊழியத்தை அநேக வருஷக்காலமாக நடத்தி கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு கூட்டத்தையும் 90 அல்லது 100 நாட்களாக நடத்துவேன். பின்பு தொடர்ந்து 1 மாதம் நடத்துவேன். எப்பொழுதும் மைக்கிலே பேசிக்கொண்டேயிருப்பேன். அதுவே எனக்கு ஆஸ்துமா வியாதியை கொண்டுவந்தது. டாக்டர்கள் என்னிடத்திலே, மைக்கிலே பேசுவதை விட்டுவிடுங்கள், அப்பொழுது உங்களுடைய ஆஸ்துமா வியாதி குணமாகும் என்று சொன்னார்கள். தேவனுடைய ஊழியத்திற்காகதானே நான் வந்தேன். ஆண்டவர் எனக்கு கொடுக்கும் காலம் வரைக்கும் தேவனுடைய சுவிசேஷத்தை மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று நான் தீர்மானித்து இன்று வரை போதகம் செய்து வருகிறேன். என்னுடைய சுகத்தை நான் பெரிதாக கருதவில்லை.

டி.பி என்ற வியாதியும் பெற்றோர்களுக்கு இருந்தால், பிள்ளைகளுக்கு வருகிறது. அதேபோல இருதயநோயும் பிள்ளைகளுக்கு வருகிறது. இப்படிப்பட்ட அநேகவிதமான வியாதிகள் பெற்றோர்களிடத்திலிருந்து பிள்ளைகளுக்கு வருகிறது. இதை நாம் தவிர்க்கமுடியாது. ஒரு தகப்பன் சிகிரெட் பிடித்துக் கொண்டிருந்தால், அவருக்கு பிறக்கிற பிள்ளைகள் சுலபமாக சிகிரெட் பிடிக்கும் பழக்கத்தை கற்றுக்கொள்ளுவார்கள். பெற்றோர்கள் மதுபானம் குடித்தால், பிள்ளைகளும் சுலபமாக குடிக்க பழகிவிடுவார்கள்.

ஆகவே பெற்றோர்கள், எப்படி வாழ்வது என்பதிலே மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சில பெற்றோர்களுக்கு பயங்கரமான வியாதிகள் இருக்குமானால், பிள்ளைகளை பெறக் கூடாது. அப்படி அவர்கள் பிள்ளைகளை பெற்றுக்கொண்டால், அந்த பயங்கரமான வியாதிகள் பிள்ளைகளுக்கு வந்துவிடும்.

காலரா என்ற வியாதி, நாம் வசிக்கும் ஊரிலே வந்துவிட்டால், அப்படியே எல்லோருக்கும் பரவிவிடுகிறது. இப்படியாக அநேகவிதமான தொத்து வியாதிகளுக்கு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆகவே இஸ்ரவேலர்களுக்கு தொத்து நோய் வந்துவிட்டால், பாளையத்துக்கு புறம்பே அவர்களை வைக்கவேண்டும் என்று ஆண்டவர் சொன்னார். இப்படியாக

வியாதிகள் மூன்றாம் நான்காம் தலைமுறை வரைக்கும் வருகிறது.

இந்த வியாதிகள் எதனாலே வருகிறது? வேத புத்தகத்திலே முதலாவதாக எழுதப்பட்ட புத்தகம் யோபுவின் புத்தகமே. மோசே மீதியான் வனாந்திரத்திலே இந்த யோபு என்ற புத்தகத்தை முதலாவதாக எழுதினார். பிறகுதான் ஆதியாகமத்தையும் இன்னும் மற்ற புத்தகங்களையும் எழுதினார். ஆகவே இந்த யோபு புத்தகத்திலே ஆண்டவர், இந்த உலகத்தினுடைய துவக்கங்கள், மற்றும் அநேகவிதமான காரியங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட காரியங்களில் ஒன்றான காரியம் என்னவென்றால், **“சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக; தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனுஷன் கொடுத்துவிடுவான். ஆனாலும் நீர் உம்முடைய கையை நீட்டி, அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான். அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: இதோ, அவன் உன் கையிலிருக்கிறான்; ஆகிலும் அவன் பிராணனை மாத்திரம் தப்பவிடு என்றார். அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான்.” - யோபு 2:4-7.**

பிறகு அவனுடைய உடம்பெல்லாம் வெடிப்பாய் இருந்தது. அந்த வியாதி ஒரு வகையான குஷ்டரோகம். இன்றைக்கு வியாதிகள் வருகிறது என்றால், அது சாத்தானாலே வருகிறது. சாத்தான், இந்த உலகத்தின் பிள்ளைகளுக்கு ஏராளமான நோய்களை கொடுத்துவருகிறான்.

ஆதியிலே, இந்த உலகத்தின் மக்களுடைய உயிர் வாழ்வை பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு சாத்தான் பல முயற்சிகளை செய்து வந்தான். மிக பிராமாண்டமான மிருகங்களான டைனோசர் என்ற மிருகளையெல்லாம் மற்ற ஜாதி மிருகங்களோடு சேர்த்துவிட்டு அதன் உயிர் வாழ்வு எங்கிருந்து வருகிறது என்று அறிய முயற்சிசெய்தான். ஆனால் தேவன் அவைகளையெல்லாம் அழித்துவிட்டார். ஆகவே இப்பொழுது அந்த உயிர்த் தத்துவத்தை அறிந்து கொள்ளவதற்காக மைக்ராகோப்ஸ் மூலம் கண்ணுக்கு தெரியாத உயிர் கிரிமிகளை ஒன்றோடுன்று இணைத்து, இந்த உயிர்த்தத்துவத்தை எப்படியாவது கண்டுபிடிக்கவேண்டுமென்று அவன் பிரயாசப்பட்டுக் கொண்டிருக் கிறான். அதனாலே அந்த வைரஸ் என்ற கிரிமிகள் இப்பொழுது உலகத்தில் ஏராளமாக வர ஆரம்பித்தது. அவைகளோடுகூட கொடிய வியாதிகளும் உலகத்திலே வந்துகொண்டிருக்கிறது.



ஆகவே இந்த உலகத்தின் மக்கள் வியாதியினாலே கஷ்டப்படுவதற்கு முக்கியமான ஒரு காரணம் சாத்தானே. நாம் நன்றாக வாழவேண்டும் என்று அவன் எப்பொழுதும் விரும்பினது கிடையாது. நாம் சாப்பிடுகிற ஒவ்வொரு அரிசி, கோதுமை பருக்கையிலும் ஆண்டவருடைய கல்வாரி சிலுவை பொரிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையிலே மரித்திராவிட்டால், இந்த உலகம் என்றைக்கோ அழிந்துபோயிருக்கும். சாத்தான் இந்த உலகத்தின் மக்களை கொன்று போட்டிருப்பான். அவன் ஈவு இல்லாதவன், இறக்கமில்லாதவன், கொடியவன், மிக பயங்கரமானவன். ஆனால் கர்வாரி சிலுவை நமக்கு இரட்சிப்பை கொடுத்தது.

இந்த வியாதியிலிருந்து நாம் எப்படி விடுதலையாவது? வியாதிகளை நாம் புறக்கணிக்கமுடியாது. இயற்கையாகவே இந்த வியாதியிலிருந்து நாம் விடுதலைபெறுவதற்கு, இறைவன் நமது உடம்பில் எதிர்ப்பு சக்திகளை வைத்திருக்கிறார்.

இரத்தத்திலே வெள்ளை அணுக்கள் சிவப்பு அணுக்கள் என்ற இரண்டு அணுக்கள் இருக்கிறது. இந்த சிவப்பு அணுக்கள் அதிகமாக இருக்கிறபடியினாலே இரத்தம் சிவப்பாக தெரிகிறது. இந்த சிவப்பு அணுக்களை இன்றைக்கு ஆராய்ச்சி செய்து பார்த்து கண்டுபிடித்ததில், அந்த அணுக்கள் ஒரு படகு மாதிரி இருக்கிறது. அந்த படகில் பிராண வாய்வையும் மற்ற சக்தி களையும் ஏற்றிக்கொண்டு உடலில் பல்வேறு பாகங்களுக்கு எடுத்துசெல்கின்றது.

வெள்ளை அணுக்கள் நம்முடைய உடம்பிலுள்ள சிப்பாய்கள். அந்நிய கிரிமிகள் உள்ளே வரும்போது, இந்த வெள்ளை அணுக்கள் சண்டையிட்டு அவைகளை வெளியேற்றுகின்றன. நமக்கு புண் வந்து அதனாலே சீழ் வெளியே வருகிறதே, அதெல்லாம் செத்துபோன வெள்ளை அணுக்கள். ஒரு வேலை அந்த வெள்ளை அணுக்கள் வீரியம் போதாமல், அசுத்த கிரிமிகள் அதிகமாக இருந்தால், அப்பொழுது வெள்ளை அணுக்கள் தோற் கடிக்கப்பட்டு வியாதியை கொண்டுவருகிறது.

வியாதிகளுக்கு நாம் உட்கொள்ளுகிற மருந்துகள் யாவும், வெள்ளை அணு சக்தியை உற்சாகப்படுத்துகிறது, பெலப்படுத் துகிறது. மருந்துகளினால் நாம் குணமாவது இல்லை என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

நமக்கு வியாதிலிருந்து சுகம் கிடைக்கிறதென்றால், மருந்து சாப்பிட்டு சுகமாகிறதில்லை. அந்த மருந்துகள், வெள்ளை அணுக்களை தூண்டிவிட்டு உற்சாகப்படுத்தி குணமடைய செய்கிறது. குணமடைவது என்றால், அந்த வெள்ளை அணுக்கள் மூலமாகதான் கிடைக்கிறது. மருந்துகளில் இரண்டு வகையான மருந்துகள் இருக்கிறது. ஒன்று ஆகாரம் வகையின் மூலமாக கிடைக்கிறது. சில வைட்டமின்கள் நமது உடலில் குறைந்துபோனால், அதனால் சில நோய்கள் வருகிறது. நமது வைட்டமின் குறைகிறதோ அல்லது எந்த உணவு சத்து குறைகிறதோ, அந்த உணவு சத்தை, மருத்துவர்கள் மருந்தாக நமக்கு கொடுக்கிறார்கள். அந்த உணவு சத்து உடலிலே சென்று, எவ்வளவு சத்து உடம்பிலே எடுத்துக்கொள்ளவேண்டுமோ, அதை எடுத்துக்கொண்டு வியாதியை சுகமாக்குகிறது.

உடலிலே அநேகவிதமான சக்திகள் இருக்கிறது. அநேகவிதமான அமிளங்கள் இருக்கின்றன. ஜீரணிப்பதற்கு ஒரு அமிளமிருக்கிறது. இவைகள் யாவும் நல்லவிதமாக நமது உடலிலே வேலை செய்யவேண்டும் என்றால், உடற்பயிற்சி தேவைப்படுகிறது. இன்றைக்கு பொதுவாகவே உடற்பயிற்சியை பற்றி மக்கள் அதிகமாக கவலைப்படுகிறதில்லை. தேவன் சொன்னர் நீ மண்ணிலே இருந்து எடுக்கப்பட்டப்படியினால், நெத்தி வேர்வை நிலத்தில் விழ நீ பாடுப்பட்டு சாப்பிடுவாய் என்று சொன்னார். நம்முடைய உடம்பிலே வேர்வை வரும்படியாக நாம் வேலை செய்யவேண்டும். எந்த வேலை செய்தாலும் வேர்வை வெளியேவரவேண்டும். அப்படி செய்யும்போது, அந்த உடற்பயிற்சி நம்முடைய உடலிலே இருக்கிற சக்திகளுக்கு ஊக்கம் கொடுத்து, நம்முடைய சுகவீனங்களையும் பெலவீனங்களையும் மாற்றுகின்றன என்று நாம் அறியவேண்டும்.

நம்முடைய வாழ்க்கை பழையப்படியில்லாதபடி புதிதாக நம்முடைய வாழ்க்கையை நாம் சீர்த்திருத்திக்கொள்வோமானால், அநேக வியாதிகள் சுகமாகும். இப்பொழுது நாம் நடத்தும் வாழ்க்கை முறையை சற்று மாற்றிக்கொள்ளவேண்டும். அதாவது மாமிச உணவுகளை விட்டு காய்கறி உணவை மாற்றிக் கொள்ளவேண்டும். மூன்று முறை மட்டுமே நாம் சாப்பிட வேண்டும். கூடுமானால் இரண்டு முறை சாப்பிடுவது மிகவும் நல்லது. இந்த மூன்று முறை சாப்பிடுகிற ஆகாரங்களுக்கு இடையிலே எதையும் சாப்பிடக்கூடாது. டீ, காப்பி, வெற்றிலை,



பூரி, போண்டா, மிக்சர், முறுக்கு, சுண்டல் என்று எதையும் சாப்பிடக்கூடாது.

நம்முடைய உடம்பிலே சுரப்பி சுரக்கின்றன. நாம் சாப்பிடும் போதெல்லாம் அது சுரக்கிறது. அதற்கு கொஞ்சம் ஓய்வு கொடுக்காமல், வாயினுள்ளே கிடைக்கிறதெல்லாம் அனுப்பிக் கொண்டேயிருந்தால், அந்த சுரப்பிக் கடைசியில் ஓய்வில்லாமல் அல்சரை கொண்டுவந்துவிடும். வடை மீது ஆசையிருந்தால் உணவு நேரத்தில் உணவோடு சாப்பிட வேண்டும். காப்பி, டீ, சிகரெட் போன்ற தீய காரியங்களை முழவதுமாக விட்டுவிட வேண்டும்.

நாம் சாப்பிடும்போது நன்றாக மென்று சாப்பிட வேண்டும். வாயினுள்ளே சோறு உருண்டை போனவுடனேயே, ஒரே முழங்கு முழங்கிவிடக் கூடாது. அதை பொறுமையாக மென்று சாப்பிட வேண்டும். அடுத்து நன்றாக துாங்கவேண்டும். அதற்கென்று பத்து அல்லது பண்ணிரெண்டு மணிநேரம் துாங்கக்கூடாது. எட்டு அல்லது ஆறுமணி நேரம் நன்றாக துாங்கினால் போதும். ஆகாரத்திலே அதிகமான எண்ணையை தவிர்க்கவேண்டும். எண்ணையில்லாத பண்டத்தைதான் மருத்துவர்கள் சாப்பிட சொல்லுகிறார்கள்.

உப்பு அதிகமாக சேர்க்கக்கூடாது. காரத்தை அதிகமாக குறைக்கவேண்டும், காரத்தை குறைத்து சமைக்கவேண்டும். அடுத்து, எப்பொழுதும் கவலைப்பட்டுக்கொண்டிருக்ககூடாது. யாராவதுகூட எப்பொழுதும் சண்டையிட்டுகொண்டும், மோதி கொண்டும் இருக்கக்கூடாது.

நாம் ஜெபிக்கும்போது ஆண்டவர் சுகம் தருகிறார். **“நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.”–யோவான் 14:13.**

விசுவாசத்தோடு நம்முடைய பிதாவாகிய ஆண்டவரை நோக்கி விசேஷமாக ஜெபிக்கவேண்டும். நம்முடைய கவலை களையும் கண்ணீரையும் எல்லாவற்றையும் தேவனுடைய பாதத்தில் வைத்துவிடவேண்டும். நாம் வேண்டிக்கொள்ளும்போது ஆண்டவர் நம் ஜெபத்தை கேட்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும்.

**“அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிற தெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்.”–1 யோவான் 3:22.**

இப்படிப்பட்ட வசனங்கள் வேதத்திலே அநேக இடங்களிலே வருகிறது. அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு, அவருடைய வசனங்களுக்கு செவிக்கொடுத்து, நாம் எதை வேண்டிக் கொண்டாலும் ஆண்டவர் அதற்கு பதிலளிக்கிறார். நாம் நம்முடைய சொந்த ஜெபங்களிலே விசுவாசத்தோடு தேவனிடத்தில் கேட்கவேண்டும். பாவ அறிக்கை செய்து ஆண்டவரிடத்தில் கேட்கவேண்டும். அவருடைய நாமத்தை துதித்து கேட்கவேண்டும். அவருடைய நாமத்திற்கு மகிமையாக அவருடைய வசனத்தையும், கற்பனைகளையும் கைக்கொண்டு அவரிடத்தில் கேட்கவேண்டும். அப்பொழுது நம்முடைய வியாதிகள் நிச்சயமாக சுகமாகும்.

**“உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண் ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.”-யாக்கோபு 5:14.**

**“அநேகம் பிசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்.”-மாற்கு 6:13.**

## தெய்வீக சுகம்

**“நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்.”-யாத்.15:26.**

இங்கு தம்முடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய சொல்லுகிறார். அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால் நம்முடைய தேவன் நமக்கு வியாதிகள் வராமல் பாதுகாக்கிறார். அவருடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியாமல் போனால், நாம் வியாதிகளை வரவழைத்துக் கொள்கிறோம்.

ஆண்டவர் இந்த உலகத்தில் இருந்தபோது, யூதர்கள் மருத்துவத்திலே மிகவும் பிரபலமானவர்களாக இருந்தார்கள். அவர்கள் பிசின் தைலத்தை இன்றைக்கும் தயாரித்துகொண்டு வருகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி சொல்லுகிறார்: நீ வியாதிப்பட்டிருக்கும்போது உனக்கு அந்த பிசின் தைலம் உனக்கு உதவவில்லையோ என்று கேட்கிறார்.



**கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்த மடையாமற்போனாள்? — எரேமியா 8:22.**

மருந்துக்கு விரோதமாகவோ மருத்துவத்திற்கு விரோதமாகவோ ஆண்டவர் ஒரு போதும் பேசினதில்லை.

**“இயேசு அதைக்கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை.”-மத்.9:12.**

பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டும் என்றுதான் சொல்லுகிறார். ஆகவே திருமறை நமக்கு என்ன சொல்லுகிறது? மருந்து வேண்டாம் என்ற கொள்கைத் திருமறையிலே இல்லை.

**“எலிசா கில்காலுக்குத் திரும்பிப் போய் இருக்கையில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; தீர்க்கதரிசிகளின் புத்திரர், அவனுக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார்கள்; அவன் தன் வேலைக்காரனை நோக்கி: நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்சு என்றான். ஒருவன் கீரைகளைப் பறிக்க வெளியிலே போய், ஒரு பேய்க் கொம்மட்டிக் கொடியைக் கண்டு, அதன் காய்களை மடி நிறைய அறுத்துவந்து, அவைகளை அரிந்து கூழ்ப்பானையிலே போட்டான்; அது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாதிருந்தது. சாப்பிட அதை ஜனங்களுக்கு வார்த்தார்கள்; அவர்கள் அந்தக் கூழில் எடுத்துச் சாப்பிடுகிறபோது, அதைச் சாப்பிடக் கூடாமல்: தேவனுடைய மனுஷனே, பானையில் சாவு இருக்கிறது என்று சத்தமிட்டார்கள். அப்பொழுது அவன், மாவைக் கொண்டுவரச்சொல்லி, அதைப் பானையிலே போட்டு, ஜனங்கள் சாப்பிடும்படி அவர்களுக்கு வார் என்றான்; அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற் போயிற்று. பின்பு பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனுஷன் தேவனுடைய மனுஷனுக்கு முதற்பலனான வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டுவந்தான்; அப்பொழுது அவன்: ஜனங்களுக்குச் சாப்பிடக்கொடு என்றான்.”-2 இராஜாக்கள் 4:38-42.**

இந்த கதையை வைத்துதான் இன்றைக்கு capsule கண்டுபிடித்தார்கள்.

**“அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது. அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள். மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று. அவர் அங்கே அவர்களுக்கு ஒரு நியமத்தையும் ஒரு நியாயத்தையும் கட்டளையிட்டு, அங்கே அவர்களைச் சோதித்து: நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச்**

**செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்."-யாத்.15:23-26.**

இன்றைக்கும் அப்படிப்பட்ட மரங்களை வைத்து, மருத்துவக்கலையிலே அநேக மருந்துகளில் கசப்பை நீக்கி வருகிறார்கள்.

**"பின்பு அந்தப் பட்டணத்தின் மனுஷர் எலிசாவை நோக்கி: இதோ, எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது; தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம் என்றார்கள். அப்பொழுது அவன்: ஒரு புதுத் தோண்டியை எடுத்து, அதிலே உப்புப் போட்டுக் கொண்டுவாருங்கள் என்றான்; அதை அவனிடத்தில் கொண்டு வந்தபோது, அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு: இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். எலிசா சொன்ன வார்த்தையின்படியே அந்தத் தண்ணீர் இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று."**
**-2 இரா.2:19-22.**

ஒரு ஊற்று அங்கு கசப்பாக இருந்தது. அதிலே எலிசா உப்பை போட்டு அந்த ஊற்றை சுத்தமாக்கினான் என்று வேதம் சொல்லுகிறது. அந்த உப்பைப் போட்டது ஒரு மருத்துவம் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

எசேக்கியா ராஜா மிகவும் வியாதிப்பட்டான். அந்த வியாதிக்கு பெயர் ராஜப்பிளவை என்று அழைக்கப்படுகிறது. அந்த வியாதி வந்தால், மருந்தேயில்லை, சாகவேண்டியதுதான். ஆகவே அந்த வியாதி எசேக்கியா ராஜாவுக்கு வந்தது. ஆனாலும் அவன் ஆண்டவரை நோக்கி கூப்பிட்டு அழுதான். உமக்கு உண்மையாக இருந்தேனே, உத்தமுமாக இருந்தேனே என்று அவன் கண்ணீர் விட்டு அழுதான்.

**"நீ போய் எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்."-ஏசாயா 38:5.**

நாம் ஆண்டவருக்கு முன்பாக கண்ணீர் விட்டு அழும் ஜெபத்தை அவர் பார்க்காமல் இருப்பதில்லை. நாம் கேட்கிற காரியங்களை அவர் கேளாமல் இருப்பதில்லை. இதோ அந்த ராஜாவின் ஜெபத்திற்கு ஆண்டவரிடத்திலிருந்து பதில்வருகிறது. உன் விண்ணப்பத்தை கேட்டேன், உன் கண்ணீரை கண்டேன்



என்று தேவன் பதில் கொடுக்கிறார். இதோ உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன் என்று சொன்னார்.

**"அத்திப்பழத்து அடையைக் கொண்டுவந்து பிளவையின்மேல் பற்றுப்போடுங்கள்; அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா சொல்லியிருந்தான்."-ஏசாயா 38:21.**

பிளவை என்ற வியாதிக்கு கைத்தேர்ந்த மருந்து அத்திப்பழமே. அது அநேக நோய்களுக்கு மருந்தாக இருக்கிறது. தீமோத்தேயுவுக்கு அடிக்கடி வயிற்று வலி வரும். இன்றைக்கு அடிக்கடி வயிற்றுவலி வருகிற பிள்ளைகளுக்கு ஆண்டவர் சொல்லுகிற மருந்து என்ன?

**"நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம்குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்."**
**-1 தீமோத்தேயு 5:23.**

வயிற்று வலியுள்ளவர்கள் திராட்சை பழங்களையும், திராட்ச ரசத்தையும் குடிக்கவேண்டும். புதிய வானம் புதிய பூமியிலும்கூட இந்த விதமான மருந்தை ஆண்டவர் சொல்லுகிறார்.

**"நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்."-வெளி.22:2.**

அந்த மரத்தின் பழத்தை சாப்பிட்டு நம்முடைய ஆயுசை கூட்டிக்கொண்டே போகிறோம். அந்த மரத்தின் இலைகளை சாப்பிட்டு சுகமாக வாழ்வோம்.

**"நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியில் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும், அவைகளின் கனிகள் புசிப்புக்கும் அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள்."-எசேக்கியேல் 47:12.**

மருந்துக்கு தமிழ் சொல் என்னவென்றால் அவிழ்தம். ஆகவே புதிய வானம் புதிய பூமியிலேயே அந்த மருந்தை பற்றி ஆண்டவர் சொல்லுகிறார். மருந்து வேண்டாம் என்ற கொள்கைகள் வேத்திலே எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

தெய்வீக சுகமென்றால், தேவன் நேரிடையாகவே தம்முடைய பிள்ளைகளுக்கு சுகத்தை கொடுக்கிறார். ஆவியானவர் தேவனுடைய பிள்ளைகளின் மேல் வரும்போது, வரங்களை கொடுக்கிறார். திருமறை சொல்லுகிறது:

நான் பரிசுத்த ஆவியானவரை அந்நாட்களில் ஊற்றுவேன் என்று சொல்லுகிறார். பரிசுத்த ஆவியானவரை ஊற்றுவேன் என்பதன் பொருள் என்னவென்றால்: வரங்களை ஆண்டவர் கொடுக்கிறார் என்று அர்த்தமாகிறது.

**“அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்க ளெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.” - அப்.2:3,4.**

ஆகவே ஆவியை ஊற்றுவேன் என்பதற்கு வரங்கள் என்று அர்த்தம். தேவ ஆவியானவருக்கு இரண்டு வேலைகள் உண்டு.
முதலாவது: மனிதனுடைய உள்ளத்தில் போராடி, அவனுடைய பாவத்தை சுட்டிக்காட்டி, ஆண்டவராகிய இயேசுவினிடத்திற்கு அனுப்பி, பாவ மன்னிப்பைப் பெற்று, திரும்ப வந்து ஆண்டவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுவதற்கு நமக்கு பெலத்தை கொடுத்து, நம்மை கிறிஸ்தவ வழியிலே நடத்தி, இரட்சிப்புக்கென்று நம்மை முத்திரிக்கிறார்.

நம்முடைய இரட்சிப்பின் திட்டம் அத்தனையும், தேவ ஆவியானவரால்தான் நடைபெறுகிறது. ஆகவேதான் தேவன் சொன்னார்: தேவ ஆவியானவருக்கு விரோதமாக பாவம் செய்தால், மன்னிக்கப்படாத பாவம் என்று சொன்னார்.

தேவ ஆவியானவரை அசட்டைப் பண்ணக்கூடாது. தேவ வசனத்தின் மூலமாக ஆவியானவர் பேசும்போது, அசட்டை செய்யக் கூடாது. தப்பிதம் என்று தெரியும்போது அந்த நேரத்திலேயே திரும்பிவிடவேண்டும். இன்னும் கொஞ்காலம் போகட்டும். என்று சொல்லக்கூடாது. அது சாத்தானுடைய வேலையாயிருக்கிறது.

இரண்டாவது: ஆவியினாலே அபிஷேகம் பண்ணப்படுதல், ஆவி ஊற்றப்படுதல், ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுதலேயாகும். இந்த திருச்சபையை, ஊழியத்தை செய்வதற்கே ஆண்டவர் கொடுத்தார். உலகமெங்கும்போய் ஊழியம் செய்யுங்கள் என்று தேவன் சொன்னார். பெலவீனமான நாம் உலகமெங்கும் போய் ஊழியம் செய்யமுடியுமா? அதற்காகவே தேவன் இந்த ஊழியத்திலே வரங்களை தருகிறார். அந்த வரங்களிலே விசேஷமானது என்ன?



**“வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. 1 கொரி.12:4,5.**
**எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப்பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளை யெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்.”**
**- 1 கொரி. 12:8-11.**

சிலர் சொல்லுகிறர்கள், ஆவியானவர் வந்தால் பல பாஷைகளை பேசவேண்டுமென்று. திருமறையிலே ஆவியானவர் ஆறு இடங்களிலே வந்திருக்கிறார்.

**1. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். —அப். 2:3,4.**

**2. அவர்கள் ஜெபம்பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரிமாய்ச் சொன்னார்கள். — அப்.4:31.**

**3. இவர்கள் வந்தபொழுது அவர்களிலொருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். —அப்.8:15-17.**

**4. அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து சகோதரனாகிய சவுலே, நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான்.- அப்.9:17,18.**

**5. இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். – அப்.10:44.**

**6. அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். – அப்.19:6.**

இங்கு ஆவியானவரின் கிரியைகளை பற்பலவிதமாக காண்கிறோம். ஆவியானவர் உண்மையான பாஷைகளை மனிதர்கள் மூலமாக பேசினார். மற்ற நாட்டு பாஷைகளை பேசினார். ஏதோவிதமான பாஷைகளை பேசவில்லை. நான் கூட்டத்திலே தமிழில் போதகம் செய்கிறேன், ஏனென்றால் கூட்டத்திற்கு வரும் மக்களுக்கு தமிழ் தெரியும் என்பதால் தமிழில் பேசுகிறேன். இதில் இன்னொரு பாஷைப் பேசவேண்டிய அவசியமில்லை. சிலர் சொல்லுகிறார்கள், நாங்கள் பேசுவது கடவுளோடு பேசுகிறோம் என்று சொல்லுகிறார்கள்.
கடவுளுக்கு தமிழ் தெரியாதா? ஆங்கிலம் தெரியாதா? அப்படியிருக்கக் கடவுளோடு பேசுவதற்கு நம்முடைய சொந்த மொழியில் பேசாமல் இன்னொரு புரியாத பாஷையில் என்னத்திற்கு பேசவேண்டும்?

பல பாஷை பேசும்போதுதான் ஆவியானவர் வருகிறார் என்று வேதத்திலே சொல்லப்படவில்லை. தேவனுடைய வரங்கள் எங்கு தேவைப்படுகிறதோ அங்கே தேவன் கொடுக்கிறார். அவருடைய நாமம் மகிமைப்படும்படிக்காகவே அவர் அப்படி செய்கிறார். இந்த பலபாஷையை நான் இருமுறை பேசினதுண்டு. எனக்கு அந்த வரத்தை ஆண்டவர் கொடுத்தார். குணமாக்கும் வரத்தை கடவுள் கொடுத்தார். பிசாசுகளை துரத்துகிற வரத்தை கொடுத்தார். அற்புதங்களை செய்கிற வரத்தை கொடுத்தார். இந்த வரங்கள் யாவையும் என்னுடைய ஜீவியத்தில் ஆண்டவர் எத்தனையோமுறைக் கொடுத்தார். ஆனால் எங்கு தேவைப் பட்டதோ அங்கே கொடுத்தார்.

ஒரு சமயத்திலே பிசாசு பிடித்திருந்த மனிதனை தூக்கி கொண்டுவந்தார்கள். அப்பொழுதுதான் நான் காலேஜ் படிப்பு முடித்து வந்திருந்தேன். பிசாசு விரட்டுவதை குறித்து நான் கேள்விப்படவில்லை. எப்படி விரட்டுவது என்று நான் பார்த்ததுமில்லை. சங்கரன்கோவில் என்ற ஊரிலே ஆண்டவரை குறித்து பிரசங்கம் செய்து கொண்டிருந்தேன்.



அப்பொழுது ஒரு பெரிய வாலிபனை அழைத்து வந்தார்கள். அவனது முகம் மாறியிருந்தது.

அவன் மூக்கு, வாய், கை, கால்கள் யாவும் முறுக்கிக்கொண்டு தரையில் போட்டு தலையை அடித்தது. பத்து பேர் தலையை பிடித்து கொண்டார்கள். ஆனாலும் அந்த வாலிபனை இருபது முப்பது பேர்கள் பிடித்தால்தான் நிற்பான்போலிருந்தான்.

அங்கு ஒரு பெரியவர் சொன்னார்: ஐயா! நீங்கள் இயேசு கிறிஸ்துவை பற்றி பேசினீர்கள். இந்த சங்கரன்கோவிலில் அம்மாதான் பெரிய தேவதை. அங்கு அழைத்து சென்றோம், திருசெந்தூருக்கு அழைத்துசென்றோம், இப்படி நிறைய இடங்களுக்கு அழைத்துச் சென்றோம். ஆனால், சுகமாகவில்லை. ஆனாலும் நீங்கள் இன்னொரு தெய்வத்தை பற்றி பேசுகிறீர்களே, அந்த இயேசு கிறிஸ்து இந்த வாலிபனை குணமாக்கமுடியுமா? அப்படி இயேசு கிறிஸ்துவானர் இவனை குணமாக்கினால், நாங்கள் அந்த ஆண்டவரை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னார். எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. இதுவரை பிசாசு விரட்டிய அனுபவம் கிடையாது.

முழங்காற் படியிட்டு ஜெபித்தேன். ஆண்டவரே! உம்முடைய நாமம் மகிமைப்படும்படி, நீர் உண்மையான தேவன் என்பதை இந்த மக்கள் உணர்ந்துகொள்ளத்தக்கதாக, இந்த பிசாசை நீர் விரட்ட வேண்டுமென்று ஜெபம்பண்ணி, அந்த வாலிபனின் கையை பிடித்து நீர் எழுந்திரு என்று சொன்னேன். இருபது பேரால் பிடித்துகொண்டிருந்த அந்த வாலிபன், அவர்களை விலக்கி விட்டு, தூரத்தில் குதித்தான். கீழேயும் குதித்து விழுந்தான், செத்தவன்போல கிடந்தான். அவனுடைய வாயிலே ஏராளமாக நுறை வர ஆரம்பித்தது. தண்ணீரை அவன் முகத்திலே தெளித்தார்கள், அவன் சுகமானான்.

அவன் இப்பொழுது, பாண்டிபஜார் (சென்னை) என்ற இடத்திலே வேலைசெய்து கொண்டிருக்கிறான், அவனது பெயர் துரைராஜ். தேவனுடைய வரம் எங்கு தேவைப்படுகிறதோ, அங்கே அந்த வரங்களை கொடுக்கிறார்.

நான் பிலிப்பைன்ஸ் நாட்டிலே படித்து கொண்டிருந்த போது, அங்கு பிரசங்கம் செய்வதற்காக விடுமுறை நாளில் போய் விடுவேன். என்னை ஒரு மலைக்கு கொண்டுபோய், அங்கே பிரசங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

அவர்கள் தகாலோ என்ற பாஷையை பேசினார்கள். எனக்கு அந்த பாஷையின் ஒரு வார்த்தைக்கூட தெரியாது.

அப்பொழுது ஒரு ஆசிரியர் மொழி பெயர்புக்கு என்னோடு வந்தார். நீங்கள் முன்பாக போங்கள், நான் பின்னாக வருகிறேன் என்று சொன்னார். நான் போய் அந்த ஜனங்களின் மத்தியில் உட்கார்ந்தேன். ஏறக்குறை 300 பேர் அங்கு கூடி வந்திருந்தார்கள். அவர்கள் என்னை பார்ப்பதும், நான் அவர்களை பார்ப்பதும், அவர்களை பார்த்து நான் புன்னகைப்பதும், அவர்கள் என்னை பார்த்து, சிரிப்பதுமாக இருந்தது. நான் உட்கார்ந்து ஒரு மணி நேரமாகிவிட்டது, அந்த ஆசிரியர் வரவில்லை.

நான் முழங்காற்படியிட்டு: ஆண்டவரே! பலபாஷை வரத்தை தருவேன் என்று சொன்னீரே, இப்பொழுது அந்த பலபாஷை வரம் எனக்கு தேவைப்படுகிறது, எனக்கு அதை தாரும் என்று சொல்லி எழுந்து நான் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தேன்.

அங்கு ஒரு பெரிய அமைதல் உண்டாயிற்று. அந்த ஆசிரியர் பாதி பிரசங்கத்திலே வந்தவர், அந்த கூட்டத்தாரோடு சேர்ந்து உட்கார்ந்துவிட்டார். அந்த பிரசங்கம் முடிந்தவுடன் அந்த ஆசிரியர் என்னிடத்தில் வந்து, தகாலோ பாஷையை எவ்வளவு சுத்தமாக அழகாக பேசினீர்கள்! உங்களுக்கு தகாலோ பாஷை எப்படி தெரிந்தது? என்று கேட்டார். ஆகவே நான் பேசினது தமிழில், ஆனால் மக்களுக்கு போய் சேர்ந்தது, தகாலோ பாஷையில்.

எந்த இடத்தில் எந்த வரங்களை கொடுக்கவேண்டும் என்று ஆண்டவருக்கு தெரியும். எல்லோரும் பலபாஷை பேசவேண்டும் என்று வேதத்திலே சொல்லப்படவில்லை. பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் வரங்களிலே குணமாக்கும் வரம் ஒன்றிருக்கிறது. இன்றைக்கு குணமாக்கும் வரத்தை பெற்ற தேவனுடைய பிள்ளைகள், கைகளை வைத்து வியாதியுள்ளவர்களை தொடும்போது, அது கண்டிப்பாகவும், நிச்சயமாகவும் குணமாக வேண்டும். காரணம் அந்த வரம் தேவ ஆவியானவரின் வரமாக இருக்கிறது. அந்த வரத்தை பெற்றவர்கள் ஒரு வியாதியையும் குணமாக்காமல் போகமுடியாது.

**"அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிக ளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்:"-மத்.8:16.**

**"பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப**



**ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்."-மத்.9:35.**

**"இயேசு அதை அறிந்து, அவ்விடம் விட்டு விலகிப்போனார். திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்; அவர்களெல்லாரையும் அவர் சொஸ்தமாக்கி," -மத். 12:15.**

**"திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள்; அவ்விடத்தில் அவர்களைச் சொஸ்தமாக்கினார் ."—மத்.19:2.**

**"ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர் இருந்தார்கள். அவர்களைப் பந்திக்கு ஐம்பது, ஐம்பதுபேராக, உட்காரும்படி சொல்லுங்கள் என்று தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார்."—லூக்கா 9:14.**

இயேசு கிறிஸ்துவண்டை வந்தவர்களும், அப்போஸ்தலர் களிடத்திலே வந்தவர்களும் யாவரும் குணமாகாமல் போனதில்லை, எல்லோரும் குணமடைந்தார்கள்.

இன்றைக்கு சுகமளிக்கும் ஆராதனை, தெய்வீக ஆராதனை, வரம்பெற்றோம் என்று சொல்லுகிறார்கள், எல்லோரும் வாருங்கள்! சுகமாக்குகிறோம்! இயேசுவின் நாமத்திலே சுகமளிக்கிறோம்! வாருங்கள் என்று அழைக்கிறார்கள். அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வருகிறார்கள். நாள் முழுவதும் அங்கு காத்துக்கொண்டிருக்கிறார்கள். கடைசியாக எத்தனை பேர் சுகமாகிபோகிறார்கள்? என்று நமக்கே தெரியும். சுகமாகாமல் தங்கள் வீடுகளுக்கு திரும்ப போகிறவர்கள் எத்தனை ஏமாற்றமடைகிறார்கள்? குணமாக்கும் வரத்தை பெற்றவர், தன்னிடத்தில் வந்த எல்லோரும் சுகமாகிதான் போகவேண்டும். யாருமே ஏமாந்துபோகக்கூடாது. இயேசுவிடமோ சீஷர்களிடமோ வந்த வியாதியுள்ளவர்கள், அந்த இடத்திலேயேதான் சுகமாகி போனார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

ஏன் சுகமாகவில்லை என்று அந்த சுகமளிக்கும் போதகரிடத்திலே கேட்டால், அவர்கள் விசுவாசிக்கவில்லை என்று பதில் கொடுக்கிறார்கள். வரம் என்றால் தெய்வத்துடைய வல்லமை நம்மேல் நேரடியாகவே கிரியை செய்கிறது. ஆகவே நாம் பரிசுத்தமாய் நடந்து, தேவனுடைய வல்லமையினாலே நாம் முழுவதுமாய் விசுவாசித்து, ஒரு வியாதியை போ என்றால் அது நிச்சயமாக போயே ஆகவேண்டும். அதுதான் தேவவரம் பெற்ற தற்கு சமம்.

நான் அந்த வியாதியை சுகப்படுத்த என் ஜெபத்தினால் பிரயாசப்பட்டேன், ஆனால் அந்த வியாதிக்காரன் விசுவாசிக்க வில்லை, அதனால் அவன் சொஸ்தமாகவில்லை என்று சொல்வது தவறு. வியாதிக்காரர்கள் யாவரும் சுகமளிக்கும் கூட்டத்திற்கு வருகிறார்கள் என்றால், அவர்கள் தேவன் எப்படியும் சுகமளிப்பார் என்று விசுவாசித்துதானே வருகிறார்கள்.

ஆனால், உண்மையாகவே சுகமளிக்கும் வரத்தை அந்த போதகர் பெற்றிருப்பாரானால், எப்படி இயேசு கிறிஸ்து எல்லார் கண்களுக்கு முன்பாக சுகமாக்கினாரோ, அதேபோல இந்த வரத்தை பெற்ற போதகரும் சுகமாக்கவேண்டும். இல்லையேல் அந்த போதகரிடத்தில் சுகமளிக்கும் வரமும் இல்லை, அவருக்கே தான் சுகமாக்குவோமோ என்ற அவிவிசுவாசமும் பரிசுத்தமும் இல்லாமையும் இருக்கலாம்.

அதனால்தான் வந்தவர்கள் ஏமாற்றமடைந்து போகிறார்கள். இதை பார்த்து கொண்டிருக்கிற சாத்தானும் நம்மை பார்த்து பரியாசம் பண்ணுவான்.

ஆகவே, வாருங்கள்! சுகமளிக்கிறோம் என்று சொல்லி, சுகமடையாமல் வெறுமனேயென்று போகும்போது, ஆண்ட வருடைய நாமத்திற்கு எத்தனை அவமானத்தை கொண்டு வருகிறோம் என்று பாருங்கள்.

வேதத்திலே சுகமளிக்கும் வரம் இங்கே கொடுக்கப்படுகிறது, அங்கே கொடுக்கப்படுகிறது என்று விளம்பரப்படுத்தினார்களா? வேதத்திலே எந்த இடத்திலேயும் அப்படி சொல்லப்படவில்லை.
இயேசு கிறிஸ்துவோ அல்லது அப்போஸ்தலர்களோ, வாருங்கள் உங்களை சுகமளிக்கிறோம் என்று அழைத்ததில்லை. அப்படியில்லாமல் இயேசு என்ன சொல்லுகிறார்? என்று படியுங்கள், **“இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு;”-மாற்கு 1:41-43.**

ஆகவே, வாருங்கள் சுகமளிக்கிறோம் என்றும் சுகமளித்த பிறகு எல்லோரிடத்திலும் போய் விளம்பரப்படுத்துங்கள் என்று சொல்லாமலேயேதான் இயேசுவும், அப்போஸ்தலர்களும் செய்தார்கள்.

இந்த கடைசி நாட்களிலே இந்த சுகமளிக்கும் வரம் தருகிற கூட்டம் எங்கிருந்து வருகிறது என்று பாருங்கள்.



**“ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங் களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.” — மத்.24:24.**

அந்த அற்புதங்களும் அடையாளங்களும், மனிதர்களுடைய நாமத்தைதான் மகிமைப்படுத்தும். இந்த அற்புதங்களும் அடையாளங்களும் பிசாசினிடத்திலிருந்து வருகிறது என்று தேவன் சொல்லுகிறார். ஆகவே அற்புதங்கள் அடையாளங்கள் செய்கிறவர்களிடத்தில் நாம் போகக்கூடாது என்று ஆண்டவர் நம்மை எச்சரிக்கிறார்.

ஆகவே சுகமளிக்கும் வரம் சிலருக்கு இருக்குமானால், அவர்கள் உண்மையானவர்கள்தானா என்று இரண்டு வசனங்களின் மூலம் அறிந்துக் கொள்ளலாம். ஏசாயா 8:20. மத்தேயு 7:16. நாம் சுகவீனமுள்ளவர்களாக இருந்தால், தேவனிடம் தனிமையாய் கண்ணீர் விட்டு அழுது மன்றாடி ஜெபிப்போம். தேவன் நமது கண்ணீரின் ஜெபத்தை நிச்சயமாக கேட்பார்! கேட்பார்! கேட்பார்! உபவாசத்தோடே கேட்போம், எனக்கு சித்தமுண்டு நீ சுத்தமாகு என்று சொல்லுவார்
– ஆமென்.